# திருக்கண்ணபுரத் தல வரலாறு

[illegible]
TP
N51
111791

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

# திருக்கண்ணபுரத் தல வரலாறு

இது

சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்புக்கழக சமயப் பிரசாரகர்,
காரைக்கால் வைணவப் புரவலர் - பிரபன்ன வித்வான்

**காரை - நா. ஸ்ரீகாந்த ராமாநுஜர் அவர்களால்**

எழுதப்பெற்றது.

தேவஸ்தான வெளியீடு

**வெளியிட்டவர் :**

**திரு. G. கோவிந்தசாமி நாயுடு,** *நிர்வாக தருமகர்த்தர்*
**திரு. S. சுந்தரேச அய்யர்,** *தருமகர்த்தர்*
**திரு. R. S. முத்துவேலுப் பிள்ளை,** *தருமகர்த்தர்*
**திரு. S. தங்கவேலுப் பிள்ளை,** மானேஜர்
திருக்கண்ணபுரம் தேவஸ்தானம்

1951

[விலை அணா ஐந்து

111791

N51
NADU ARCHIVES LIBRARY
N51
NADU ARCHIVES LIBRARY
111791

# அறிமுகம்

சென்னை அறநிலையப் பாதுகாவல் கழகத்தினர், ஒவ்வொரு தலத்திற்கும் வரலாறு எழுதி, யாவர்க்கும் எளிதில் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று எல்லா தேவஸ்தானங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை விடுத்துள்ளனர். இவ்வுயரிய ஆணையின்கண்ணே யிருந்து, "திருக்கண்ணபுரத் தலவரலாறு" என்ற இச்சிறு நூல் எழுதப்பட்டது. இவ்வரிய நூலை, காரை, வைணவப் புரவலர், உயர்திரு. நா. ஸ்ரீகாந்த ராமானுஜர் அவர்கள் முறையே தொகுத்தும் எழுதியும் தந்தார்கள். இவ்வரிய நூல், இந்துமத அறநிலையப் பாதுகாவல் கழக முன்னாள் தலைவர், உயர்திரு. C. M. இராமச்சந்திரம் செட்டியார் அவர்களின் பாராட்டுதலைப் பெற்றது என்பதை, எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் இத்தலத்தின் பெருமைகள் யாவும் நமது மனக்கண்ணிலே தோன்றி, நம் அனைவரையும், ஸ்ரீ ஆண்டாளின் வழியிலே சென்று, எம்பெருமானின் அன்பிலே திளைக்கச் செய்கிறது.

எனவே, இந்நூலை வெளியிட்ப் பெருமுயற்சி செய்த, சென்னை H.R. & C.E. கமிஷனர் உயர்திரு. T. M. சின்னையாபிள்ளை, M.A., B.L. அவர்கட்கும், உதவி கமிஷனர் உயர்திரு. P. சுப்பிரமணிய பிள்ளை, B. A., B. L. அவர்கட்கும், இந்நூல் ஆசிரியரான உயர்திரு. நா. ஸ்ரீகாந்தராமானுஜர் அவர்கட்கும் தேவஸ்தானத்தின் சார்பாக என் நன்றி கலந்த வணக்கம்.

S. தங்கவேலு,
நிர்வாகப் பொறுப்பாளர்

திருக்கண்ணபுரம்
15-12-1951

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம :

ஸ்ரீகிருஷ்ணபுர நாயகீ சமேத ஸ்ரீசௌரிராஜ பரப்ரம்ஹணே நம :

# திருக்கண்ணபுரத் தல வரலாறு

உத்பலா வதகே திவ்யே விமானே புஷ்க ரேக்ஷணம் |
சௌரிராஜ மஹம் வந்தேஸதாஸர்வாங்க ஸௌந்தரம் ||

இல்லையல்லல் எனக்கே லினியென்குறை
அல்லிமாதர் அமருந்திரு மார்பினன்
கல்லிலேய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரம்
சொல்லநாளும் துயர்பாடு சாராவே. —நம்மாழ்வார்

மற்றுமோர் தெய்வம் உளதென் றிருப்பாரோடு
உற்றிலேன் உற்றதும் உன்னடியார்க்கடிமை
மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்துங்
கற்றுநான் கண்ண புரத்துறையம்மானே. —திருமங்கையாழ்வார்

## தோற்றுவாய்

நலம்பல நிறைந்த சோழவள நாட்டிலே சிறந்து விளங்கும் திருமால் திருப்பதிகள் பல. அவற்றுள் ஆஸ்திகர்கள் விரும்பிப் பரவும் திவ்விய தேசங்கள் நாற்பதாகும். “ஈரிருபதாம் சோழ மீரொன்பதாம் பாண்டி” என்ற திவ்விய கவி அழகிய மணவாள தாசரின் நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதியின் திவ்விய தேசங்களின் தொகைப்பாட்டு இதனை மெய்ப்பிக்கும். திவ்வியதேசங்கள் என்பன ஆழ்வார்களால் மங்களா சாசனஞ் செய்யப் (பாடல்) பெற்ற தலங்களாகும்.

திருமாலின் சோழ நாட்டுத் திருப்பதிகள் நாற்பதுள் தஞ்சை ஜில்லா நாகைப்பட்டினம் நன்னிலம் தாலுக்காவில்

ஐந்து திருப்பதிகள் உள்ளன. அவை : திருநாகை, திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை, திருச்சிறுபுலியூர் என்பனவாகும்.

அவற்றுள் திருக்கண்ணபுரம் என்னும் இத்திவ்வியத் திருப்பதியானது, ஸ்ரீ கிருஷ்ணாரண்யத்தின்கண்ணே தஞ்சை ஜில்லா நன்னிலம் ரயில்வே நிலையத்திலிருந்து கிழக்கே சுமார் நான்கு மைல் தூரத்தில் இலங்கித் துலங்கும் திருக்கோயிலுடன் மிளிர்ந்து ஒளிர்வதாகும்.

இத்தலத்திற்குச் செல்ல வண்டி வசதிகளுண்டு. இது நன்னிலம் S. I. R. நிலையத்திலிருந்து கிழக்கே நாகைப்பட்டினம் செல்லும் கற்சாலை மார்க்கத்தில் 3½ மைல் தூரத்திலுள்ள திருப்புகலூர் என்னும் சிவத்தலத்தையடுத்து, முடிகொண்டான் ஆற்றுக்குத் தென்கரையில் உள்ளது.

இப்பதிக்கு வடபால் முக்கால் மைலில் காவிரியின் கிளை நதியான முடிகொண்டானும், தெற்கே ஒருமைல் தூரத்தில் புத்தாறு என்ற வேறோர் கிளை நதியும் பாய்கின்றன. ஈண்டுத் திருக்கோயிலுக்கு எதிரில் பெரிய புண்ணியத் தடாகமொன்றும், தென் மேற்கில் மற்றொரு பெரிய தடாகமும், மற்றும் பல குளங்களுமிருக்கின்றன. இவ்வூரின் ஜனத்தொகை சுமார் 2000 மாகும். சேவார்த்திகள் தங்குவதற்கென இங்கு வடக்கு வீதியில் ஓர் இராமானுஜகூடமும், தெற்குவீதியில் பொதுச்சாவடி யொன்றும் உள்ளன.

## தலச் சிறப்பு

இத்தலம் ஸ்ரீ கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரமென்றும், ஸ்ரீமத் அஷ்டாக்ஷர மகா மந்திர சித்தி க்ஷேத்திரமென்றும், பெயர் பெற்று, பெரியகோயில் என்னும் திருவரங்கத் திருப்பதியில் எழுந்தருளியுள்ள திருவரங்கச் செல்வனார்க்குக் கீழைவீடு என்று சிறப்பித்துச் சொல்லும் சீர்மையும் உடையது.

ஸ்ரீ கண்ணனெம்பெருமான் மிக மகிழ்ந்து நித்தியவாசம் செய்யும் திருப்பதியானதால் இத்தலம் திருக்கண்ணபுரம் எனப் பெயர் பெறுவதாயிற்று. இத்தலம் திருமால் திருப்பதிகள் நூற்றெட்டினுள் ஒன்றாய், புராணப் பிரசித்தமுடையதுமாகும்.

இப்பதி உயர்வற வுயர்நலம் வுடைய இறைவனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற பரமபக்தி நிஷ்டர்களான ஆப்த



தமர்களாம் ஆழ்வார்கள் பன்னிருவருள், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், ஸ்ரீகுலசேகரப்பெருமாள், பெரியாழ்வார், ஸ்ரீ ஆண்டாள் ஆகிய ஐம்பெரும் அருட்குரவர்களால் முறையே “வைகுந்தங் கொடுக்கும் பிரான்”, “மைவளர்க்கும் மணியுருவம் மரகதமோ மழைமுகிலோ”, “தேவரையும் அசுரரையுந் திசைகளையும் படைத்தவனே”, “கண்ணபுரத்தமுதே”, “கண்ணபுரநகர் வாட்டமின்றி மகிழ்ந்துறை வாமனன்” என மங்களா சாசனம் செய்யப்பெற்ற பெரிய திருவீறுமுடையதாகும்.

“மண்ணிலிது போல நகரில்லை” எனப் பெருமைசான்ற இத்தலம், எழுபெரும் புண்ணியங்கள் ஒருங்கே யமையப்பெற்றது. அவையாவன : க்ஷேத்திரம், வனம், நதி, கடல், நகரம், புஷ்கரிணி, விமானம் முதலியன. அவையேழும் இத்தலத்தில் பொருந்தியுள்ளமை வருமாறு காண்க : ஸ்ரீ கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரம், தண்டகவனம், காவிரிநதி, கடல், கண்ணபுரநகர், நித்தியபுஷ்கரிணி, உத்பலாவதக விமானம். தண்டக மகரிஷி இவ்வனத்தில் நித்தியவாசம் செய்தமையால் இவ்வனம் தண்டகவனமெனப் பெயர் பெற்றது. “காவிரி நன்னதிபாயும் கணபுரம்”, “வேலை மோதும் மதிள்சூழ் திருக்கண்ணபுரம்” என்ற ஆழ்வார்களின் அணிபொதிந்த மணிவாக்கால் நதியும் கடலும் சேர்ந்துள்ளமை நனிவிளங்கும்.

முத்திதரும் தலங்களாய திருவரங்கம், திருவேங்கடம், ஸ்ரீமுஷ்ணம், வானமாமலை, சாளக்கிராமம், புஷ்கரம், வதரியாச்சிரமம், நைமிசாரண்யம் ஆகிய எட்டுத் திருப்பதிகளில் இறைவன் அட்டாக்கர மகா மந்திரத்தின் ஓரோர் அக்ஷரஸ்வரூபியாய் எழுந்தருளியிருப்பதாகவும் ; ஆனால் எழுபெரும் புண்ணியங்களும் ஒருங்கே யமைந்த இத்தலத்தின்கண் “எட்டெழுத்தின் முழுவடிவினாய் (அஷ்டாக்ஷர பூரணஸ்வரூபனாய்) நித்தியவாசம்செய்தருளுகின்றேன்” என்று ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் தன் சோதிவாய்த் திறந்து அருளிச்செய்தருளினான் என்னும் தலபுராண வரலாற்றால், இத்தலம் முத்தி தரும் தலங்களில் முதன்மையும் மேன்மையு முடைய தொன்றெனத் தெற்றென விளங்கும். எவரும் இத்தலத்தில் திருவெட்டெழுத்தினை ஒருமுறை சிந்தித்த மாத்திரத்தில் அதன் பூரண சித்திபெறுவர். சொல்லும் முறைதவறிச் சொன்னோரும் இத்தலத்தின் சீர்மையால் அதன் முழுப் பயன் பெறுவர்.

உலகின் சகல புண்ணிய தீர்த்தங்களும், ஸ்ரீபக்ஷிராஜனும் தண்டக மகரிஷியும், கருடாத்திரியும், இந்திரனும், உபரிசரவசுவும், பாண்டியனும் புராண வரலாறு கூறுமாறு ஈடுபட்டுப் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி வணங்கிய இத்தலத்தின் பீடுயர் பெருமை பேசுந்தரமன்று. ஆழ்வார்களின் ஈடுபாடு அசாதாரண வைபவமுடையது.

ஈண்டு வாட்டமின்றி, திருக்கோயில் கொண்டு மகிழ்ந்துறையும் இறைவன் ஸ்ரீசௌரிராஜப் பெருமாளாவர்.

## கோயிலின் அமைப்பு

திருக்கோயில் மிகப் பழைமையானது. சிறந்த முறையில் அமைந்திருப்பது. சாதாரணமாக முதியோர் பலரும் "அறுபத்து நான்கு சதுர்யுகம் கண்டவர் ஸ்ரீ சௌரிப்பெருமாள்" என்று கூறுவது கொண்டு, இத்தலத்தின் மிகப் பழைய தொன்மையை ஒருவாறு யூகித்துக்கொள்ளலாம். காண்போர் கண்கள் கொள்ளை கொள்ளும் கவினையுடைய இத்திருக்கோயில் கிழக்கு மேற்கில் 316 அடிகளும், தென்வடவில் 210 அடிகளும் உடையது. இதன் பெரிய திருக்கோபுரம் 95 அடி உயரமுள்ளது. எழுநிலை மாடம் அமைந்தது. நித்தியபுஷ்கரிணியை அடுத்தது. கிழக்குநோக்கி வானளாவி நிற்பது. கண்டவர் கண்களுக்குப் பெருங் களிப் பூட்டும் காட்சியுடையது. இதன்மேல் நின்று பார்க்கச் சுற்றிலும் 10 மைல் தூரம் கண்களுக்கு நன்குதெரியும். இக்கோபுரமே இன்று கோயிலின் தொன்மையைச் சுட்டி நிற்கின்றது.

இக்கோபுரத்தினை யடுத்து உள்ளே பலிபீடமும், மறை வடிவான ஸ்ரீ கருடக்கொடி பறக்கும் கொடிமரமும் உள்ளன. அடுத்துள்ள சிறிய திருக்கோபுரம் மூன்றடுக்குடையது. இதன் உயரம் 60 அடிகளாகும். சந்நிதிக்குள் கருப்பக் கிருகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், விசாலமான சோபன மண்டபம் முதலியன வேதாகமமான வைகானச முறைப்படி அழகுற இடம் பெற்றுள்ளன. காண்பவர்க்குக் கம்பீரமாகத் தோற்றமளிக்கும் நீண்டுயர்ந்த திருமதிள்களும், அழகிய நீண்டகன்ற திருச்சுற்றும் (பிரகாரம்) கண்டுகளித்தற்குரியன.

மிகப் பழைய காலத்தில் இத்திருக்கோயில், பெரிய ஊர் பலவற்றைத் தன்னுட் கொண்டிருந்த ஏழு பெரிய திருக்கோபுர



மதிள்களுடன் கூடியிருந்ததெனக் கூறுகின்றனர். கிழக்கே சுமார் 13 மைல்களுக்கு அப்பாலுள்ள கடலலைகள் மோதும்படியான ஏழாவது திருமதிளைப் பெற்றிருந்ததெனவும், இன்றும் கடற் கரையில் அகழ்ந்து பார்க்கத் திருமதிளின் அஸ்திவாரம் தெரிகின்றதெனவும் கூறுவர். கடலலைகள் மோதும்படியான திருமதிளைப் பெற்றிருந்தமையை, "வேலை மோதும் மதிள் சூழ்திருக் கண்ணபுரம்" என்ற மாறன் மறைத்தமிழ் நன்கு வலியுறுத்துகின்றது. அவற்றுள் இன்றுள்ளன ஒழிந்த ஏனையமதிள்களும் கோபுரங்களும் சோழ மன்னனொருவனால் அழிக்கப்பட்டன வென்றும், அவ்வாறு அழிக்கப்படும் காலத்து அதுகண்டு சகியாத பெரும் பக்தரான திருக்கண்ணபுரத்து அரையர் என்பார் பூரண கர்ப்பிணியான தன் மனைவியைக் கொணர்ந்து கோபுரவாயிலில் நிறுத்தி, இப்பெண் கொலை புரிந்து வேண்டுமானால் எஞ்சிய கோயிலை அழிக்குமாறு சொல்லித் தடுத்தனரென்றும், அதனையும் மீறிக் கோயில் அழிக்கப்படுதல் கண்டு தாளாது சந்நிதிக்குள் ஓடி ஸ்ரீ சௌரிப் பெருமானை நோக்கி "இன்னும் என் செய்கின்றீர்? அன்று திருமழிசைப் பிரானுக்கு அர்ச்சாவதார சமாதி கடந்து காரியம் செய்ததில்லையோ? முற்று முணர்ந்தும் எல்லாம் வல்ல நீர் இவ்வாறு வாளா விருந்திடின் என் செய்வோம்! அழிப்பார் கொடுமையினும், நீ பொறுத்தருளும் கொடுமை பெரிதாயுளதே! நின் அருளின் கொடுமை கண்டு அஞ்சுகின்றேன். இனித் தாளேன்" என்று கூறிச் சீறி, கைத்தாளங்கொண்டு கணபுரத்து அடிகளின் திருநெற்றியில் வடுப்பட அடித்துப், பின்னரும் தாளாது கோபுரத்தின் மீதேறிக் குதித்து உயிர் கொடுத்தார் என்றும், அதுகாலை இறைவனது பிரயோகச் சக்கரத்தினின்றும் பல்லாயிரம் வீரர் தோன்றி, சோழ மன்னனது போர் வீரர்களைத் துரத்தியடித்து, சந்நிதியைக் காத்துப் போயினர் என்றும் கன்ன பரம்பரைச் செய்தியொன்று கூறுகின்றது.

மேலும், சோழமன்னன் திருக்கண்ணபுரக்கோயிலை அழித்து வரும் நாளில், அம்மன்னனின் மகன் அமைச்சர்களை நோக்கி "என் தந்தை என் செய்கின்றார்" என்று கேட்க, அவர்கள் விவரத்தைக் கூற, அதுகேட்டு கைகொட்டி நகைத்து, "அவரைப் போகச் சொல்லுங்கள்" என, அமைச்சர்கள் இளவரசை நோக்கி இவ்வாறு கூறலாமோவென்ன, அவனும் "பின் என்?

என் தந்தை என்ன காரியம் செய்கின்றார்? இவ்வுலகில் திருவாய்மொழியும் இராமாயணமும் இருக்கும் வரையில் வைணவத்தையும் அதன் சின்னங்களையும் இவரால் அழித்து விடப் போமோ?" என்று கூறியதாகக் கூறும், மற்றோர் கன்னபரம்பரைச் செய்தியும் ஈண்டு அறிந்து கோடற்குரியது.

## கருப்பக் கிருகம்

உட்கோயிலின்கண் மூலத்தானத்தில் கிழக்கே திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலமாக இரண்டு நாய்ச்சியாருடன் சேவை சாதித்தருள்பவர் பெரிய பெருமாளாவர். பரம கம்பீரத்துடன் நின்றருளும் இத்திருக்கோலம் திருமங்கை யாழ்வாரால் "கருவரைபோல் நின்றானைக் கண்ணபுரத் தம்மானை" என்று விதந்து புகழ்ந்து போற்றப்பட்டுள்ளது. இவர் திருநாமம் நீலமேகன். இவர் ஈரேழுலகங்களுக்கும் முடி சூடிய முதல்வர் எனும் உரிமை தோன்றக் கவித்த தங்க நீண்முடியர்; ஈரிரு கரத்தினர்; கரிய பொன் மேனியர்; நீண்டு வளர்ந்த ஆகத்தினர்; கருவரைபோல் நின்றருளும் பரம காம்பீர்யர். திருமகள் சேர் அகலங்கொள் திருமார்பர்; ஆஜானுபாகு; பிரயோகத் திருச்சக்கரக் கையர்; அழகிய சங்கம் அங்கையிலுடையார்; அடியவர்க்கு வைத்து அஞ்சலென்ற அபயக் கரத்தினர். மையலேற்றி மயக்குவிக்கும் அழகிய திருமுக மண்டல முடையவர். வெள்ளியங்கி தாங்கிய வீறார் திருமேனியர். உறைமாற்று அளவற்ற பொன்னுடையர். அரனயனுக்கும் அறிவரிய பொன்னங் கழலினர். இப்பொதுநின்ற பொன்னங்கழல்கள் அனைத்துலகிற்கும் புகல் அளிக்கும் புனிதமுடையன. இவர்தம் திருக்கோலம் சேவிப்பார் இதனை என்றுந் தங் கண்ணினும் கருத்தினுமே காண்பாராவர். அன்னார் எல்லா நலனும் எளிதினிற் பெறுவர்; கல்வியுஞ் செல்வமுங் கலந்து துய்ப்பர்; எண்ணியவெல்லாம் எய்தப் பெறுவர்; வாயுநன் மக்களைப் பெற்று மகிழ்வர்; ஏய்ந்த பெருஞ் செல்வத்தராய் இணையிலிவ் வுலகாண்டு மறுமையிற் பேரின்பந் துய்ப்பர். இவர் வலது திருக்கரத்தில் திருவாபரணமெனத் திகழும் பிரயோகச்சக்கரம், தன் அடியவரின் துயர்கெட விகடாக்ஷன் என்பானொரு அசுரனைக்



கொன்றருளிய அவசரத்தினையும், பண்டு உபேந்திரனாய் அவதரித்துப் பெருமலைகளின் சிறகுகளைச் சிதைத்தருளிய அவசரத்தினையும், பின்னானார்க்குக் காட்டி நிற்கும் பெருமிதம் வாய்ந்தது. இவரது இருமருங்கிலும் கூப்பிய கையராய் ஸ்ரீ தண்டக மகரிஷியும், ஸ்ரீ பக்ஷிராஜனும் (கருடன்) வணங்கி நிற்கின்றனர்.

## ஸ்ரீ சௌரிராஜன்

கண்டவர்தம் மனம் வழங்கும் கண்ணபுரத் தமுதனை, காமனுங்கண்டு நாணுறும் வடிவழகுடைய உற்சவ மூர்த்தி வரத அர்ச்சாவதாரர். இவர், வலது திருப்பக்கத்தில் உபரிசரவசு என்னும் அரசனின் புதல்வியாரான ஸ்ரீ பத்மினிதேவி யென்ற நாய்ச்சியாரோடு ஸ்ரீதேவியையும், இடது திருப்பக்கத்தில் ஸ்ரீ பூதேவியோடு, சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாரான ஸ்ரீ ஆண்டாள் அன்னையையுங் கொண்டு அழகுற நின்ற திருக் கோலத்துடன் சேவை சாதித் தருள்பவர். இவரது திருநாமம் ஸ்ரீசௌரிராஜன். சூரர் என்ற வசுதேவருக்குத் திருக்குமாரராய்த் திருவவதரித்தருளினபடியால் இவர்க்கு இத்திருநாமம் வழங்கலாயிற்று. இதனால் ஸ்ரீ கண்ணனெம்பெருமானே ஸ்ரீசௌரிராஜன் என்ற வேறுபாடின்மை (அபேதம்) அறிந்து மகிழ்தற்குரியது.'

இவர் செந்நிறப் பொன் மேனியர்; கவித்த முடியினர்; அழகிய நறுந் திருக்குழலழகர்; தங்கக் கவசம் தாங்குறு மேனியர்; திருப்பவள வாயழகர்; காதளவு ஓடி நீண்ட கண்ணழகர்; அகன்ற திருமார்பழகர்; அணிமணி புனைந்த அருட்டிரு உருவினர்; பிரயோகச் சக்கரப் பெருங்கையர்; திருச்சங்கம் பொலியும் திருக்கையர்; தாரைநீர் ஏற்றருளும் தடக்கையர்; இடையிலூன்றிய எழிலுறு கரத்தினர்; சிவளிகைக் கச்சிலங்கும் அரைச் சிவந்த ஆடையர்; தண்டுளவ மாலையர்; ஆஸ்ரித வத்சலர்; அருள் வரதர்; அனைத்துயிர்க்கும் புகலான அழகிய துயரறு சுடரடியினர்; பொது நின்ற பொன்னங் கழலினர்.

திருக்கையில் தாங்கிய திவ்யாயுதங்களும், ஏற்றருள் கையும் எழிலுறு மார்பும், கவித்த முடியும், கரிய திருக்குழலும், முகமும் முறுவலும், மோகன வடிவும், ஆஸன பத்மத்திலே அழுத்தின திருவடிகளுமாய் நின்றருள் புரியும் சர்வாங்க சுந்தர ஜஹன்

மோஹன வடிவினராய இவர்தம் திருக்கோலம் சேவிக்கப் பெறுவோர் விண்ணுளாரினும் சீரியராவர்.

இவர் அனுதின அருட்பெருஞ் சோதித் திருமுகப் பொலிவினரேனும், பஞ்ச பர்வகாலம், வைகாசி பிரம்மோற்சவம், மாசி மகோற்சவம் முதலிய விசேட திருநாட் காலங்களிலும், பிரதி அமாவாசைகளிலும் பெரிதும் ஒளிரும் திருமுகப் பொலிவினர். எனவே, அக்காலங்களில் இவர்தம் திருவடி தொழுநர் பெரும் பேறு பெறும் பெற்றியராவர். இவர்களே விழைவன பெறும் வித்தகர்கள். கண்டவர்தம் மனம் வழங்கும் கண்ணபுரத்தம்மானைக் காணாத கண் என்றும் கண்ணல்ல கண்டாமே!

வைணவ சமய ஆசாரியர்களுள் ஒருவரான பகர்வதற்கரிய பெருமை சான்ற ஸ்ரீ பட்டர், ஸ்ரீ சகஸ்ரநாம பாஷ்யத்தில் சௌரி என்ற திருநாமத்திற்கு "உத்பலாவதக விமானத்தில் பிரசித்தமான தேவதை" என்று உரையருளியுள்ளமை ஈண்டு உணர்தற்குரியது. அர்ச்சகர் ஒருவரின் பொருட்டு அரசனுக்குத் திருக்குழலுடன் சேவை சாதித்தருளினமையான் இவர்க்கு இத்திருநாமம் வந்ததென்பாரு முண்டு.

இப்பெருமானின் திருநெற்றித் தலத்தேயுள்ள வடு ஒன்று சேவித்தற்குரியது. அவ்வடு அறையர் சுவாமி (திருவாய்மொழி விண்ணப்பம் செய்வார்) ஒருவர் கைத்தாளங் கொண்டு அடித்ததன் காரணமாக ஏற்பட்டதென்பர். காரணம் முன்னே கூறப்பட்டது. இப்பெருமானது வடிவழகில் கண்வைப்பாரெவரும் பிறவற்றில் கண் வையார். சர்வாங்க சுந்தரனாகிய ஸ்ரீ சௌரிராஜனது வடிவழகில் துவக்குண்டு காதல் மையலேறிய கணபுரத்து அடியவரான திருமங்கை மன்னர், இவரைக் "கண்டவர்தம் மனம் வழங்கும் கண்ணபுரத்தம்மான்" என்றும், ஸ்ரீ குலசேகரப் பெருமாள் "கண்டவர்தம் மனம் வழங்கும் கணபுரத்தென் கருமணியே" என்றும் தப் அணி பொதிந்த மணிவாக்கால் அழகுற வாழ்த்தியருளினமை ஈண்டு எண்ணி இன்புறுதற்குரியது.

கொங்குமலர்க் குழலியர் வேளான திருமங்கை மன்னரைப் பெண்ணுடை யுடுத்துவித்து, நாரையைத் தூதுவிடப் பண்ணி, மடலேறத்துணிவித்த இப் பேரருளாளனின் பேரழகு நம்மால் பேசுந் திறத்ததோ! "தோள்கண்டார் தோளே கண்டார்,



தொடுகழற் கமலமன்ன தாள்கண்டார் தாளே கண்டார்" என்ற கம்ப நாட்டாழ்வாரின் அருட்கவிக்கு எடுத்துக் காட்டாக, வணங்கும் அடியவர்கள் திவ்வியமங்கள விக்கிரகத்தை விட்டகலினும், திவ்வியமங்களத் திருஉருவம் கண்களை விட்டகலாத காட்சியை என் சொல்லியமைவோம்!

## உத்பலா வதக விமானம்

கண்ணபுரத் தமலன் வாட்டமின்றி மகிழ்ந்துறையும் கருப்பக்கிருகமே உத்பலா வதக விமானமெனப் பெயர் பெறுவது. உயர்தவங் காரணமாக வற்றி யுலர்ந்த உடலுடையார் உத்பலர் எனப் பெறுவர். அவர்க்காகப் பரிந்தருளும் பரமதயாளன் ஆதலின் அவன் உறையும் விமானம் இப்பெயர் பெறுவதாயிற்று. அல்லி மலர் போன்ற அழகுடைமையின் இவ்விமானத்திற்கு இப்பெயர் பொருந்துமென்பாரு முண்டு. இதனால் விரும்பித் தொழும் அன்பர்க்கு மெய்யனாகிய இப் பரமனின் இனிய நீர்மை எண்ணி வாழ்தற்குரியது.

ஸ்ரீகண்ணனெம்பெருமான் எழுந்தருளியுள்ள இவ்விமானத்தின் பெயரே திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை என்ற மற்றிரு திருப்பதிகளின் விமானங்களுக்கும் அமைந்திருப்பது அறிந்து இன்புறுதற்குரியது.

தரிசன மாத்திரத்திற் சகல பாவங்களையும் போக்கடிக்கவல்ல இப்புனித விமானத்தின் பீடுயர் பெருமை பேசுந் திறமன்று.

## திருக்கைத்தல சேவை

அனைத்துலகு முடைய திருவரங்கச் செல்வரான நம்பெருமாளின் நடையழகைச் சேவிக்க விரும்பிய ஸ்ரீ விபீஷணாழ்வாருக்கு நம் கீழைவீடான திருக்கண்ணபுரத்தில் "அமாவாசை தோறும் நமது நடையழகைக் கண்டுகளிக்க" என அருளியவாறு, இன்றும் ஈண்டு அமாவாசை தோறும் ஸ்ரீசௌரிராஜன் திருக்கைத்தலத்தில் எழுந்தருளி சேவைசாதிக்கும் நடையழகுக் காட்சி அரிய திருக்காட்சியாகும். இதனால் திருவரங்கனும் ஸ்ரீசௌரிராஜனும் ஒருவரே என்ற அபேதம் அறிந்து மகிழ்க.

அழகிய திருவோலக்கத்தோடு வீதி யோலக்கங் காணவல்ல இப் பெருமானது அழகிய திருப்பள்ளியறை சேவை, பெரிய திருவடி சேவை, தெப்போற்சவம் முதலியன கண்டு களித்தற்

குரியன. உற்சவகாலங்களில் பெருமாள் திருப்பள்ளியறையில் எழுந்தருளியிருப்பது கன்னெஞ்சர் தம்மையும் கரைவிக்கவல்லது. சுற்றிலும் எட்டுத்திக்கிலும் பல பெரிய அழகிய நிலைக்கண்ணாடிகள் அமைக்கப் பெற்ற பள்ளியறையில் பெருமாள் எழுந்தருளியிருக்கும் காட்சி, வழிபடும் அடியவர்க்கு இறைவன் முன்னும் பின்னும், உள்ளும் புறமும் எங்கும் விளங்கும் உண்மையை நினைப்பூட்டும் நிகழ்ச்சியாக உள்ளமை மறக்கற் பாலதன்று.

இப் பள்ளியறைக்குக் கிழக்கே ஸ்ரீசேனைமுதலியார் சந்நிதியுளது. இதற்கெதிரில் ஸ்ரீபக்ஷிராஜன் வாகனத் திருமேனியுடன் எழுந்தருளி யிருக்கின்றனர். இவருக்கு நாடோறும் திருவாராதனம் நடைபெறுகின்றது. இவர் மிக்க வரப்பிரசாதியாவர். மகாமண்டபம் மூன்று பத்திகளுடன் விசாலமானது. இது அண்மையில் வெளிச்சமுள்ளதாக ஆக்கப்பெற்று, அழகாகத் தளவரிசையும் போடப்பெற்றுள்ளது. ஈண்டும் திருப்பள்ளியறை முகப்பிலும் அழகான சலவைக் கற்கள் பதிக்கப் பெற்றுள்ளன. இம்மண்டபத்திற்கு முன்னர் உற்சவ மண்டபமுளது. இதில் மணியம் சௌரிப் பெருமாள் சந்நிதியும், ஸ்ரீ இராமன் சந்நிதியும் இருக்கின்றன. இம்மணியம் சௌரிப் பெருமாள் முன்னர்தான் முனியதரன் பொங்கலுக்கு நெய்பிடிப்பதும், அர்த்த சாமத்திற்குப் பின்னர் பொங்கல் விற்பனை செய்வதும் நடைபெறுகின்றன. வாகனங்கள் வைப்பதற்கென இங்கு கருங்கல் அறையொன்றுமிருக்கின்றது. ஸ்ரீ இராமன் சந்நிதிக் கெதிரே தெற்கு மதிள் சுவரை யொட்டி ஸ்ரீ விபீஷணாழ்வான் சந்நிதியுளது. இதில் ஸ்ரீ அரங்கநாதனும் ஸ்ரீ விபீஷணாழ்வாரும் எழுந்தருளியுள்ளனர். தன் திருவாராதனப் பெருமாளுடன் ஸ்ரீசௌரி ராஜன் நடையழகை சேவிப்பதன் பொருட்டே இவர் இங்கு எழுந்தருளியிருக்கின்றார். இந்திர விமானமும், ஸ்ரீசக்கரவர்த்தித் திருமகன் சந்நிதியும் சேவிக்கற்பாலன. மனத்துக் கினியனாகிய இவ்விராகவப் பெருமான் ஸ்ரீகுலசேகரப் பெருமாளருளிய உலகப் பிரசித்தமான " மன்னு புகழ்க் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே " என்ற அரிய மறைப்பாசுரத்தால் மங்களா சாசனஞ் செய்யப் பெற்றவர். இச்சந்நிதி ஸ்ரீவிபீஷணாழ்வான் சந்நிதிக்கு நேராய்த் தென்னிலங்கைத் திசைநோக்கி அமைந்துள்ள அழகு நினைந்து மகிழ்தற்குரியது.



111791

## தாயார் சந்நிதி

திருக்கோயிலின் தென்புறத்தே ஸ்ரீகண்ணபுரத்தாயார் சந்நிதி கவினுற விளங்குகின்றது. இவர்தம் திருவருள் நலமே திருக்கண்ணபுரத்தின் உயர்வற உயர்ந்த சீர்மைக்குக் காரணமென்பர். ஸ்ரீகண்ணபுர நாயகியின் திருவருளுக்கு இலக்கானோர் ஏய்ந்த பெருஞ் செல்வத்தராய் ஏழுலகுமேத்த இனிது வாழ்வர். இவர்தம் கருணைக் குரியவரே விரும்பித் தொழும் மெய்யடியாராவர். இவர்க்கே அணியனாய், எளியனாய், உரியனாய், மெய்யனாய் நின்றருள் புரிவர் ஸ்ரீசௌரிராஜன்.

திருக்கோயிலின் வடபால் அரங்கர் மௌலி சூழ்கின்ற மாலையைச் சூடிக் கொடுத்த நாய்ச்சியாரான ஸ்ரீஆண்டாள் சந்நிதியும் அழகுற இடம்பெற்றுள்ளது.

## சுற்றுக் கோயில்கள்

கீழ்ப்புற திருச்சுற்றில் தெளியாத மறை நிலங்கள் தெளியவோதும் ஆழ்வார்கள், ஆசாரியர்கள், ஸ்ரீமணவாள மாமுனிகள் முதலியோர் சந்நிதியும், வெளிக் கோபுரவாசலின் அருகில் தாமோதரக் கண்ணன் சந்நிதியும், நவக்கிரஹங்களின் சந்நிதியும், திருக்குளக்கரையின் படித்துறையில் தெற்கு நோக்கிய சிறிய திருவடியின் சந்நிதியும், திருக்குளத்தின் வடபால் மடவளாகத்தில் ஸ்ரீமத் எம் பெருமானார் (உடையவர்) சந்நிதியும், மேலை வீதியில் ஸ்ரீமணவாளமாமுனிகளால் தாபிக்கப்பெற்ற ஸ்ரீபரகால வள்ளலான திருமங்கையாழ்வார் சந்நிதியும், அழகுறத் திகழ்கின்றன. இங்கிருந்து பெருமாள் விமானத்தை நன்கு தரிசிக்கலாம். நித்திய புஷ்கரிணியின் கரையை யடுத்து நான்கு மடவளாகங்களும், இதனைச் சுற்றித் தேரோடும் பெரிய திருவீதிகள் நான்கும் இந் நன்னகர்க்கு நல்லணியாம். இவ்வீதியில் மாசி மகோற்சவத்தில் சிறிய திருத்தேரும், வைகாசி உற்சவத்தில் பெரிய திருத்தேரும் ஓடுகின்றன.

## முனியதரன் பொங்கல்

ஸ்ரீ முனியதரன் என்ற மெய்யடியாரொருவர் தன் மனையில் மனைவி பரிந்து படைத்த முழுச்சேர்வையான பொங்கல் அன்னத்தை ஸ்ரீ சௌரிராஜனுக்கு அர்ப்பணம் என்று உள்ளம்

உரை செயல் பொருந்தப் பிடிதோறும் உரைத்து உண்டனர். மறுநாட்காலையில் அர்ச்சகர் சந்நிதியின் திருக்காப்பு நீக்கியவாறே சந்நிதி யெங்கும் பொங்கல் அன்னம் சிதறிக் கிடக்கக் கண்டு இது என் என்று அதிசயித்துப் பார்க்க, அப் பொங்கல் முனியதரன் இல்லம் வரையில் இறைந்து கிடந்தது கண்டனர். இதனையறிந்த முனியதரரும் அப் பொங்கல் பெருமானுக்கு உவப்பாயிருந்தது போலும் என்று நினைந்து, அன்று முதல் இரவு அர்த்த சாமத்தில் முழுச் சேர்வையாகப் பொங்கல் அமுது செய்தருளும்படி ஏற்பாடு செய்து அதற்காக மானியமும் விட்டனர். அத் தூய பேரன்பர் பரிந்துவிட்ட மானியத்தால் நாடோறும் அர்த்த சாமத்தில் பெருமாள் அமுது செய்தருளும் அப்பொங்கல் அம் மெய்யடியார் பெயராலேயே "முனியதரன் பொங்கல்" என்று போற்றப் பெறுகின்றது. இச்சந்நிதியில் இப் பொங்கல் தனி விசேடமுடைய தொன்றாம். இது 5 நாழி அரிசி, 3 நாழி பருப்பு, 2 நாழி நெய் (நாழி $\frac{1}{8}$ படி) சேர்த்துப் பக்குவம் செய்யப்படுவதாகும். ஸ்ரீ முனியதரன் விட்ட மானிய விபரமொன்றும் இன்று தெரிந்திலது. என்றாலும் அன்றாடம் இப் பொங்கல் விற்பனையாகும் வருவாயைக் கொண்டு நாள் தவறாது நடந்து வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். இம்முனியதரன் அவர்களின் திரு உருவம் ஆழ்வார் சந்நிதியின் பக்கத்திலுள்ள சிறு மண்டபமொன்றில் வைக்கப்பெற்றுள்ளது. இவரைச் சோழதேசத் தரசன் மந்திரி யென்றும் கூறுவாறுண்டு.

## ஸ்ரீ சௌரி ராஜனது சிவ வேடம்

ஆண்டுக் கொருமுறை வைகாசி பிரம்மோற்சவத்தில் 7-ஆம் திருநாள் உற்சவத்தன்று விடிவோரையில் ஒரு முகூர்த்த காலம் பெருமாள் வெள்ளை சாத்தியருளி சிவ வேடத்துடன் சேவை சாதித்தருளுவர். எல்லாம் வல்ல முதற்பெருங் கடவுளான ஸ்ரீமந் நாராயணனே அயன் அரன் இந்திரனாதிய சகல தேவர்களுள்ளும் அந்தராத்மாவாயிருந்து, அவர்கள் மூலம் படைத்தல் அழித்தலாதிய காரியங்களைச் செய்தருளுகின்றான் என்பது வேதாந்தங்களின் துணிபு. இவ்வுண்மை வேதங்களினுள்ளும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களான தமிழ் மறைகளினுள்ளும் ஆங்காங்கு அழகுபெறக் கூறப்பெற்றுள்ளது.



இப் பேருண்மையை வேதாந்த நூலறிவற்ற சாமானிய மந்த மதிகளும் எளிதில் உணருமாறு "சிவனாயிருப்பவனும் யானே" என்று பெருமாள் பிரத்தியக்ஷமாக காட்டியருளுகின்றார். "வெள்ள நீர்ச் சடையானும் நின்னிடை வேறலாமை விளங்க நின்றதும்" என்ற திருவாய் மொழியின் உண்மை இங்கு செயலளவில் விளக்கிக் காட்டப்பெறுகின்றது.

இதன்றியும், மொகலாய மன்னர் கலாப காலத்தில் பெருமாளுக்குத் தீங்கொன்றும் நிகழாதிருக்க, திருவானைக்காவல் கோயிலில் கொண்டுபோய் வைத்திருந்து; கலாபம் நீங்கியவாறே மீண்டும் திருக்கண்ணபுரத்திற்கு எழுந்தருளப் பண்ணும் காலத்தில், அத்தலாதிபரான ஜம்புகேசுவரர் தன் பரிவாரங்களைக் கொண்டு பெரிய திருவாசி கட்டுவித்துப் பெருமானைத்தாமரை முதலிய மலர்களால் அலங்காரம் பண்ணுவித்து, திருவீதி உற்சவங்கண்டருளப் பண்ணி, "கலாப காலத்தில் பெருமாள் இங்கு எழுந்தருளியிருந்த தன் நினைவாக வருடத்திற்கு ஒரு முகூர்த்த காலம் $3\frac{1}{2}$ நாழிகை தன்னைப்போல் காட்சி கொடுத்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்தனர். பெருமாளும் "அவ்வாறே செய்கின்றோம்" என்று அனுக்கிரகித்தருளியவாறு வைசாகோற்சவத்தில் 7-ஆம் திருநாள் கண்டருளி, திருப்பள்ளியறைக்கு எழுந்தருளின பிறகு, தனியாகப் பெரிய திருவாசி உற்சவங் கண்டருளி, உடனே வெள்ளை சாத்திக் கொண்டு சிவ வேடத்துடன் சேவை சாதித்தருளுவதாகவும், இதற்கடையாளமாகத் திருவானைக்காவலில் சனிக்கிழமைதோறும் ஜம்புகேசுவரருக்குத் திருத்துழாய் அர்ச்சனை நடைபெற்று வருவதாகவும் கன்னபரம்பரைச் செய்தியொன்று கூறுகின்றது.

## தீர்த்தங்கள்

"கங்கையிலும் தீர்த்தமலி கணபுரம்" என்றவாறு நித்திய புஷ்கரிணி, அநந்த பிலம், பூதாவடம், முக்தாகரம் முதலிய தீர்த்தங்கள் இத்தலத்தின்கண் மலிந்துள்ளன.

1. நித்திய புஷ்கரிணி:—இது கீழ் மேல் 452 அடிகளும் தென்வடல் 415 அடிகளும் கொண்டது. உலகின் சகல புண்ணிய தீர்த்தங்களின் பாவச் சுமை போக்கித் தூய்மையளித்த இந்த நித்திய புஷ்கரிணியின் பெருமை அளவிடற்கரியது. இப் புஷ்கரிணி மிக அகன்று ஒன்பது படித்துறைகளையுடையதாயுள்ளது.

கங்கை யமுனை முதலிய உலகின் சகல புண்ணிய தீர்த்தங்களும், மனிதர்களால் கழுவப்பட்ட பாவச் சுமையைத் தாள இயலாது மிக வருந்தி நான்முகக் கடவுளையணுகித் தாங்கள் பாவச் சுமையின் நீங்கிப் புனிதமுற வழி கூறுமாறு இறைஞ்சி வேண்டின. அருள் சுரந்த நான்முகனும் அவைகளை நோக்கி "உத்திராயண புண்ணிய காலமான இன்றே திருக்கண்ணபுரம் சென்று நித்திய புஷ்கரிணியிற் படிந்து புனிதமெய்துக" என்று கூறியவாறு தீர்த்தங்களனைத்தும் திருக்கண்ணபுரமடைந்து, நித்திய புஷ்கரிணியில் நீராடி, திவ்விய சிம்மாசனத்தில் நாய்ச்சிமார்களுடன் வாட்டமின்றி மகிழ்ந்துறையும் ஸ்ரீசௌரிப் பெருமாளைச் சேவித்து நின்றன. பெருமாளும் திருவருள் சுரந்து தீர்த்தங்களை நோக்கி, "நீங்கள் இப் புஷ்கரிணியில் உத்தராயண காலங்களில் முழு அம்சத்தோடும், ஏனைய காலங்களில் ஓரோர் அம்சத்தோடும் வசித்து வருக" என அருளியவாறு சகல தீர்த்தங்களும் இப்புண்ணிய புஷ்கரிணியில் வசித்து வருவனவாயின.

உலகின் முப்பத்து முக்கோடி தீர்த்தங்களும் பொருந்திய இப் புண்ணியப் புனலில், மற்றைய தீர்த்தங்களைப் போலன்றி, பகல் இரவு மாலை என்ற வாசியற எப்போதும் நீராடிப் பயன் பெறலாம். இக்காரணத்தால் இது நித்திய புஷ்கரிணி எனப் பெயர் பெறுவதுடன், உலகின் சகல புண்ணிய தீர்த்தங்களும் இதில் நித்திய வாசம் செய்வதால் இப்பெயர் பொருந்துமெனவும் சொல்லுவதுண்டு.

இத் தீர்த்தத்தில் உபவாஸாதி நியமங்களோடு ஓராண்டு அமாவாசைதோறும் தீர்த்தமாடுவோர் சகல பாவங்களும் நீங்கப் பெறுவர். இரண்டாண்டு மூழ்குவார் மலடு நீங்கி மக்களைப் பெற்று மகிழ்வர். மூன்றாண்டு மூழ்குவார் ஒப்பற்ற ஆரோக்கியமடைவர். நாலாண்டு நனைவோர் நவிலரிய பெருஞ் செல்வம் பெற்று மகிழ்வர். ஐந்தாண்டு ஆடுநர் சகல சௌபாக்கியமுறுவர். ஆறாண்டில் மேலாம் மெய்யறிவு பெறுவர். ஏழாண்டில் சார்வபௌமராவர். எட்டாண்டில் சர்வப்ராந்தி பரிகாரமடைவர். ஒன்பதாண்டில் தேவராஜ்யாபிஷேகமுறுவர். பத்தாண்டில் பிரம பதவி பெறுவர். பதினோராண்டில் நலமந்தமில்லதோர் நாடு பெற்றுய்வர். சங்கராந்தி தொடங்கி மூன்று நாட்கள் முறையே நீராடுவோர் நிச்சயமாக மகப்பேறு பெறுகின்றனர்.



இத்தகைய பெருமை சான்ற இப் புஷ்கரிணி வெகு நாட்களாகப் புதுக்கிச் செப்பனிடவேண்டிய நிலைமையிலிருந்ததை இந்த ஜில்லாப் பிரமுகர் செங்கமல நாயகிபுரம் ஸ்ரீ R. ரெங்கசாமி நாயுடுகார் அவர்கள் ஒருவரே சுமார் 21000 ரூபாய் செலவுசெய்து ஷை புஷ்கரிணியைச் சுத்தம் செய்து, படித்துறைகளையும், கைப்பிடிச் சுவர்களையும் புதுப்பித்துள்ளார்கள். மேற்படி கைங்கர்யம் 25—10—51-ல் பூர்த்தி செய்யப்பெற்று ஜகத்குரு ஸ்ரீ ஜத் சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அவர்கள் எழுந்தருளி முறைப்படி புஷ்கரிணிக்கு ஜலம் விடப்பட்டது.

**2.** அநந்தபிலம் :—இத் தீர்த்தம் கோயில் விமானத்தின் மேற்கே இரண்டாவது திருச்சுற்றுக்கு வெளியிலுள்ளது. அரவரசனாய ஆதிசேடன் இதன்வழி வந்து பெருமாளைச் சேவித்துப் போவதாலும், தன் உடலால் இதனைச் சுற்றிக் கொண்டிருப்பதாலும் இது இப்பெயர் பெற்றதாம். வடக்கில் இது ஆசனவடிவுடைய தென்றும், இதில் நீராடுவோர் விரும்பியது பெறுவர் என்றும் தலபுராணம் கூறும். இது ஆறு கோல் நீளமுள்ளது.

**3.** பூதாவடம் :—இது கோயிலுக்குத் தெற்கே 50 கோல் தூரத்திலிருக்கின்றது. இதன் நீளம் அகலம் 7 கோலாகும். பண்டு சந்திரன் "ராஜயக்ஷ்மா" என்னும் நோயினால் பீடிக்கப் பெற்றுத் துன்புற்றனன். அதுகண்டு சகியாத அவன் தந்தையான க்ஷீராப்திநாதன் ஸ்ரீசௌரிப் பெருமாளைப் பிரார்த்தித்தனன். பெருமாளின் நியமனப்படி ஒரு பூதம் தோன்றிச் சந்திரனின் நோயைத் தீர்த்து, அதற்குக் கைம்மாறாகத் தானுறையும் பூதாவடம் என்னும் தீர்த்தத்தில் நீராடி ஆசமனம் செய்யுமவர்களை எவ்வித நோயும் அணுகாத வரம் பெற்றுப் போயிற்று. எனவே இது சகல ரோகங்களையும் நீக்கவல்ல புண்ணியத் தடாகமாகும்.

**4.** முக்தா கரம் :—இது விமானத்தின் வடபாலுள்ளது. 5 கோல் அளவுள்ள வட்ட வடிவமான (இன்று நான்கு மூலைகளுள்ளதாக இருக்கின்றது.) இத் தீர்த்தக் கரையில் இருடியர் பலரிருந்து தவஞ்செய்வதாகக் கருதப்படுகின்றது. மூவுலக சஞ்சாரியான உபரிசரவசு என்னும் மன்னன் பாதாளமிருந்து இதன்வழி வந்து ஸ்ரீசௌரிராஜனை வணங்கி வழிபட்டனனென்றும், இத் தீர்த்தத்தைப் பருக முத்தி சித்திக்குமெனவும் புராணங்கூறும்.

## புராண வரலாறு

**சூதர் கூறும் சீர்மை** :—சூதபுராணிகர் தமது சீடர்களை நோக்கி "திருவஷ்டாக்ஷர மந்திர சித்திக்குரிய தலம், க்ஷேத்திரம், வனம், நதி, கடல், புஷ்கரிணி, விமானம் முதலிய புண்ணியங்களேழும் பொருந்தியதாகும். இவை யேழும் பொருந்திச் சிறந்தது திருக்கண்ணபுரம் ஒன்றே. அங்கு ரிஷி சந்தஸ் அங்கந்யாஸ கரந்யாஸங்கள் முதலிய அங்கங்களினின்றி திருவஷ்டாக்ஷரத்தைச் செபித்திடினும் மந்திர சித்தியும் எண்ணிய பலனும் கைகூடும்" என்றனர்.

**பக்ஷிராஜன் பூசித்தமை** :—பண்டு ஸ்ரீ கருட பகவான் தனது அன்னையாம் விநதையின் அடிமைத் தளையறுக்க அமுதத்தைக் கொணர்ந்து, தேவர்களின் வேண்டுகோட்கிரங்கி அமுதத்தை மீண்டும் அதன் இருப்பிடஞ் சேர்த்து, அதிக கர்வத்துடன் இக்கிருஷ்ண க்ஷேத்திரபாலர்களை அவமதித்துத் திரிந்தனர். அது கண்ட க்ஷேத்திரபாலர்கள் ஸ்ரீகருடனது நிழலைப் பிடித்திழுக்க, வலிமையிழந்து இத்தலத்தையடுத்த ஸ்ரீகருடபர்வதத்தில் விழுந்து வருந்தி, அங்கிருந்தபடி ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளைக் குறித்துத் தவஞ் செய்தனர். விரும்பித் தொழுமவர்க்கு மெய்யனாகிய கணபுரத்தமலனும் கருடன்முன் தோன்றியருள, தனது பிழை பொறுத்தருளி இழந்த வலிமையுந் தந்து "தேவரீரைத் தாங்கியருளும் தகுதியும் தந்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்துப் பெற்று, தாமிருந்து தவஞ்செய்த பர்வதத்திற்கும் அபயம் வாங்கித் தந்து, வாகனத்திருமேனி யெய்தினர். "கொற்றப்புள் ஒன்றேறி மன்றூடே வருகின்றான் என்கின்றாளால்" என்று பரகால நாயகி இப்பக்ஷிராஜரை மங்களாசாசனஞ் செய்துள்ளமை காண்க.

**இந்திரன் ஈடுபாடு** :— பண்டொருகால் த்வஷ்டா என்பவர் யாகத்தில் இந்திரனையுங் கொல்லவல்ல விருத்தாசுரனைப் பெற, அவனைக் கண்டு அஞ்சிய இந்திரன், மறைந் துறைந்து சமயம் பார்த்து இக்கிருஷ்ண க்ஷேத்திரத்தி லொதுங்கிய நுரையைக் கொண்டு அவ்வசுரனைக் கொன்று, அதனாலெய்திய பிரமஹத்தியினின்றும் ஸ்ரீசௌரிப் பெருமானின் திருவருளால் நீங்கி உய்ந்தனன். எனினும் இப்பேருதவியை மறந்த இந்திரன், அதுபோது இந்திரபதவியிலிருந்த நகுஷனால் திரஸ்கரிக்கப்பட்டு மீண்டும் மறைந்து திரிய, இந்திராணி ஸ்ரீ சௌரிராஜப் பெருமானை இறைஞ்சியேத்தி, திருவருள்பெற்று இந்திரனிருக்கு மிடமறிந்து,



அவனையடைந்து, இறைவனது மாயையின் துணைகொண்டு நகுஷனையும் வீழ்த்திப் பதியுடன் இந்திரபோகமெய்தினள். ஈண்டு இந்திரன் செய்யும் துதிகள் தலபுராணத்துள் அழகாகக் காணப்படுகின்றது.

**பிரயோகச்சக்கர வரலாறு** :—அன்றொருகால் விகடாக்ஷன் என்னும் அசுரன் தன் துணைவர்களுடன் கொடிய விலங்கு உருக்கொண்டு கிருஷ்ணாரண்யத்தின்கண் தவஞ் செய்துவந்த முனிவர்களை நலிய, அவர்களின் வேண்டுகோட் கிரங்கித் தன் கணங்களுடன் பெருமாள் குதிரையின் மீதேறி வேட்டையாடினர். உடனே தங்கள் மெய்யுருக்கொண்டு எதிர்த்த அசுரரனைவரையுங் கொன்று, முடிவில் அசுரர்களின் தலைவனான விகடாக்ஷனைச் சக்கரத்தால் மாய்த்தருளி உத்பலரான முனிவர்களையும் ஸ்ரீகிருஷ்ணாரண்யத்தையும் காத்தருளினர். சாது சனங்களான உத்பல முனிவர்களை நலிந்த விகடாக்ஷனைக் கொன்றருளிய அவசரந் தோன்ற, இன்றும் பெருமாள் பிரயோகச் சக்கரத்துடன் சேவை சாதித்தருளுவர். இம் முனிவர்களுக்காகப் பரிந்து நின்றருளிய பரமனுதலின் அவன் மகிழ்ந்துறையும் விமானம் அம்முனிவர்களால் உத்பலாவதக விமானம் எனப் போற்றப்பெற்றது.

**பாண்டியன் தோள்வளை சமர்ப்பித்தல்** :— சித்தஸ்ரவஸ் என்னும் பாண்டிய மன்னன் தன்மனைவி பரிவாரங்களுடன் சென்று தாமிரவருணி நதியில் ஓர் உத்தராயண புண்யகாலத்தில் தனது அருமைப் புதல்வியான உத்தமையுடன் இறங்கி நீராட, உடனே நதி வரண்டு, அதில் மூழ்கிய மன்னனையும் மகளையுங் காணாது வியந்து, அனைவரும் வருந்தியிருந்தனர். சின்னாட் கழித்து அந்நகரிற் பிறந்த வலாஹகனென்னும் பிராமணன், திருவஷ்டாக்ஷர மந்திர சித்திபெற்று, தீர்த்த தாடனம் செய்துகொண்டு வருகையில், அவ்வுத்தராயண காலத்தில் எங்கும் தீர்த்தங்களைக் காணாது திகைத்து, அகத்திய முனிவர்பால் சொல்ல, அவரையுங் காணாது அதிசயித்து, அங்கேயே சிலநாள் தங்கியிருந்தனன். சில நாட் கழிய, திரும்பி ஆச்சிரம மெய்திய அகத்திய முனிவரால் தீர்த்தங்கள் பாவ நீக்கத்தின்பொருட்டுத் திருக்கண்ணபுரம் சென்றுள்ள தறிந்து, அவணடைந்து சகல தீர்த்தங்களும் பொருந்தியுள்ள நித்தியபுஷ்கரிணியைப் பூசித்து, அதன் நடுவே உத்தமையுடன் கூடிய பாண்டிய மன்னனையுங் கண்டு வாழ்த்தியருளினன்.

தாமிரவருணியில் மகளுடன் மூழ்கிய மன்னன், கங்கையிலும் தீர்த்தமலிகணபுரத்து நித்தியபுஷ்கரிணியைச் சார்ந்தமையறிந்து, பெரிதும் வியந்து, திருவருளைப் புகழ்ந்து, உத்பலாவதக விமானத்தின்கீழ் திவ்விய சிம்மாசனத்தில் "பல்லாயிரம் இருள்கீறிய பகலோன் என ஒளிரும்" ஸ்ரீசௌரிராஜப் பெருமாளின் வடிவழகில் தன்மனதை வழங்கி வழிபட்டு நின்றனன். பரமனும் பாண்டியனைக் கடாட்சித்தருளித் தன் பக்தர்களிற் சிறந்த ஒரு சோழ தேசத்தரசனின் மகன் சுசங்கனுக்கு, உத்தமையைத் திருமணம்செய்து கொடுக்குமாறு நியமித்தருளினன். பாண்டியனும் அவ்வாறே செய்துகொடுத்து ஸ்ரீ சௌரிப் பெருமானுக்குத் தோள்வளையொன்றும் சமர்ப்பித்துப் போயினன்.

வசுமன்னன் வளநகரங் கண்டமை :—பண்டு, இந்திரனின் அநுமதியின்படி உபரிசரவசு என்னும் மன்னன் அசுரரை வென்று சிலநாள் வானுலகை யாண்டிருந்து, அசுவமேதயாகம் செய்துகொண்டிருந்த இந்திரனைக் காண மண்ணுலகெய்தி, ஸ்ரீ கிருஷ்ணாரண்யத்தில் தேடியலைந்து, பசிதாகத்தால் நலிவுற்று, ஆண்டிருந்த தினைப்புனத்துட் புகுந்து தினைக்கதிரைக் கொய்தனன். உடனே அப்புனங்காத்து நின்ற பதினாறு வயதுடைய திவ்யபுருடன் தடுக்க, அதனாற் போர் மூண்டு முடிவில் ஆற்றலிழந்த அரசன் திகைப்பெய்தி, இவன் மானிடனல்லன் என மனத்திடை நினைந்து, வில்லையெறிந்து, திவ்யபுருடனையணுகிக் கைகளைக் கூப்பி, "இறைவ நீர் யார்? உமது திருமேனியின் காந்தி சௌந்திரியாதிகளையும், மலர்ந்த செந்தாமரை யொத்த திருக்கண்களையும் நோக்க, நீர் புண்டரிகாக்ஷனை திருமாலே என உன்னுகின்றேன். உமது திருக்கைகளிலுள்ளது சாரங்கமேயன்றோ? ஒளியாது உண்மையைச் சொல்லியருள்க" எனப் பிரார்த்தித்து நின்றனன். திவ்யபுருடனும் "அரசே இப் பொய்கையில் நீராடி வருக; பின்னர்க் கூறுகின்றோம்" என்ன, அவ்வாறே நித்தியபுஷ்கரிணியில் நீராடி அதன் கரையில் திவ்ய விமானத்தின்கீழ் நான்கு திருக்கரங்களுடன் திவ்யாபரண ஆயுதங்கள் தாங்கி வாட்டமின்றி மகிழ்ந்து நின்றருளும் இறைவனையும் முனிவர்களையுங் கண்டு வியந்து, வீழ்ந்து வணங்கித் திருமார்பில் அம்பெய்த பிழைகளைப் பொருத்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்து, பெருமாளின் அநுமதிகொண்டு கிருஷ்ணாரண்



யத்தை அநேக மாடமாளிகையும் அணியார் வீதிகளுமுடைய அழகிய நகரமாக்கி, கோபுர பிரகார மண்டபங்களுடன் திருக்கோயிலையும் கட்டுவித்து, ஸ்ரீ சௌரிராஜன் சகல உபசாரங்களையும் குறைவின்றிக் கண்டருள மானியங்கள் விட்டு, பிரம்மோற்சவமும் கண்டருளப்பண்ணி கிருத கிருத்யனாயினன்.

பத்மினி நாய்ச்சியார் திருமணம் :—பின்னர், இவ்வசு மன்னனுக்கு இலக்குமிப் பிராட்டியின் அம்சமான ஓர் பெண் மகவு பிறந்தது. பெண்ணின் பேரழகு கண்ட மன்னன் பெரிதும் மகிழ்ந்து பத்மினி என்று பேரிட்டுத் திருமகள்போல வளர்த்து வந்தனன். மணத்துடன் முளைக்கும் திருத்துழாய் போன்று, இப் பெண்ணரசியும் ஞானபக்தி வைராக்கியங்களுடன் வளர் பிறையென்ன வளர்ந்து, "கண்ணபுரமொன்றுடையானுக் கல்லது மானிடவர்க்கென்று வாழ்க்கைப்படில் வாழகில்லேன்" என்ற உறுதியுடன், ஸ்ரீ சௌரிராஜப் பெருமானையே மணக்க விரும்ப, மன்னனும் அவள் விருப்பின்வண்ணம் வைகாசிப் பௌர்ணமி கூடிய அனுஷ நன்னாளில் ஸ்ரீ சௌரிராஜனுக்கு அவளைக் கன்னிகாதானம் செய்துகொடுத்து, பெருப் பெருத்த திருக்கல்யாணமும் செய்து மகிழ்ந்தனன். இந் நாய்ச்சியாரை ஏற்றருளிய தான ஹஸ்தத்துடன் இன்றும் பெருமாள் சேவை சாதித்தருள்வது பெரிதும் உன்னுதற்குரியது. இப்பத்மினி நாய்ச்சியாரை வலைநாய்ச்சியாரென்றும், தங்கள் குலத்தவரென்றும், இவரைத் திருமணம் புணர்ந்தமையின் ஸ்ரீ சௌரிப்பெருமாள் தமக்கு மருகராவரெனவும் கூறி நெய்தல் நில மக்கள் கொண்டாடிக் களிப்புறுகின்றனர். மாசி மகோற்சவத்தில் பெருமாள் தீர்த்தவாரிக்குத் திருமலைராயன் பட்டினம் கடற்கரைக்கு எழுந்தருளும்போது, இவர்கள் காட்டும் தூய பேரன்பும், களிப்பும், மகிழ்ச்சியும் கண்டு யாரும் அதிசயிக்காமலிரார்.

மந்திரச் செபமின்றி மநுப்பயன் பெறுதல் :—முன்னொருகால் இக் கிருஷ்ண க்ஷேத்திரத்தின் கீழெல்லையான ஸ்ரீ கருடபர்வதம் திருவஷ்டாக்ஷரத்தைச் செபித்துச் சித்திபெற்று, பிரத்தியக்ஷமான ஸ்ரீ சௌரிப் பெருமாளைச் சேவித்து, "திருவஷ்டாக்ஷரத்தைப் பல்லாயிர முரு செபித்திடாமலே அதன் பயனைப் பெறுதற்கு உபாயம் கூறியருளுமாறு கேட்க, இறைவனும் மிக மகிழ்ந்து "திருவரங்கம் முதலிய சுயம்புத் தலங்களில் யான் திருவஷ்டாக்ஷ

ரத்தின் ஓரோர் அக்ஷரஸ்வரூபியாய் விளங்குகின்றேன்; புண்ணியங்களேழும் பொருந்திய திருக்கண்ணபுர நன்னகரில் அஷ்டாக்ஷரத்தின் முழு வடிவினனாய் நித்தியவாசம் செய்தருளுகின்றேன். ஆதலின் இத்தலத்தில் பக்தியுடன் வசிப்பதனாலேயே அப்பயனைப் பெறலாம். நூறுமுறை விமானப் பிரதக்ஷிணம் செய்வதாலும், பன்முறை என்னை நினைத்தலாலும், நித்திய புஷ்கரிணிக் கரையில் சாஸ்திரோக்தமான தானங்களைச் செய்வதாலும், உண்மையுடன் முழுவன்போடு திருக்கண்ணபுரம் என்று கூறுவதாலும் அப்பயனைப் பெறலாம்" என்று கூறியருளினன். பலன்களும், உபாயங்களும் விரிவாகத் தலபுராணத்துட் கடைசி அத்தியாயத்திற் கூறப்பெறுவது காண்க.

இவ்வாறு இத்தலத்தின் வரலாறு பலவும் ஸ்ரீ பாத்ம புராணத்துள், ஐந்தாவது காண்டத்தில், மந்திர சித்திப் பிரதேசங்களைப்பற்றிக் கூறுமிடத்துப் பதினாறு அத்தியாயங்களாகக் கூறப்பெற்றுள்ளன.

## கலியனும்—கணபுரமும்

"கள்ளவிழ் சோலைக் கணபுரம் கைதொழும் பிள்ளையைப் பிள்ளை யென்றெண்ணப் பெறுவரே" என்றார் திருமங்கையாழ்வார். எனவே இத்தலத்தில் கலியனான நம் திருமங்கை மன்னருக்குள்ள ஈடுபாடு எழுத்தில் அடங்காதது. ஆழ்வார் தாம் பெரிய திருமந்திரத்தின் முடிந்த பொருளை உள்ளவாறுணர்ந்து, கண்ணபுரத்து அடியார்க்கு அடியரானது இத்தலத்தில்தான் என்கின்றார். "உற்றதும் உன்னடியார்க் கடிமை, மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்துங் கற்றுநான் கண்ணபுரத்துறை யம்மானே" என்ற பெரிய திருமொழிப் பாசுரம் இதனை நன்குணர்த்துவதாகும். இவர் உயர்வறவுயர்ந்த உத்பலாவதக விமான சேவையை இடையறாது பெற்று மேலைவீதியில் எழுந்தருளி யிருக்கின்றார். "மற்றை யாழ்வார்களைப் போலன்று, திருக்கண்ணபுரம் என்றால் இவர்க் கிருப்பது. சோமாசி யாண்டானுக்கு எம்பெருமானாரே சரணம் என்பதுபோலவும், ஸ்ரீபட்டருக்கு நம்பெருமாள் என்பதுபோலவும், அநந்தாழ்வானுக்குத் திருவேங்கட முடையான் என்பது போலவும் இவர்க்குத் திருக்கண்ணபுரமென்பது" என்ற ஸ்ரீமத் பெரியவாச்சான் பிள்ளையின் அணி பொதிந்த மணிவாக்கு



கண்டுப் பெரிதும் ஆழ்ந்து சிந்திக்க உரியது. திருநெடுந் தாண்டகத்தில் "பொன்னானாய்" என்ற திருமொழியுள் ஸ்ரீ சௌரிராஜப் பெருமானைக் "குணபாலமதாயினாய்" என்று அநுபவிக்கும் அழகு சிந்தனைக்கினியது.

இத்திவ்யதேச விஷயமாக நூறு திருமொழி யருளிச்செய்துள்ளதும், அதனுள் "கண்ணபுர மொன்றுடையானுக்கு அடியேன் ஒருவர்க்குரியனோ" என்றும் "உண்டிவர்பாலன்பெனக் கென்றொரு காலும் பிரிகிலேன்" என்றும், "பாட்டினால் உன்னை யென்னெஞ்சத் திருந்தமை காட்டினாய் கண்ணபுரத்துறை யம்மானே" என்றும், பெரிய திருமடலில் "நான் வணங்கும் கண்ணனைக் கண்ணபுரத்தானை" என்றும் கூறுவது கொண்டு இவ்வாழ்வாருக்குக் கண்ணபுர வள்ளல்பாலுள்ள பேரன்பும், ஆழ்ந்த ஈடுபாடும், ஆற்றாமையும் நனிவிளங்குவன.

திருநெடுந்தாண்டகத்துள் "செங்கால மடநாராய்" என்ற திருப்பதிகத்தில் "திருக்கண்ணபுரம்புக்கு என் செங்கண்மாலுக்கு, என்காதலென் துணைவர்க்கு" என்று கூறுதலால் கண்ணபுரத்து அடிகளார்பால் இவர் கொண்டுள்ள காதல் கடலினும் மிகப் பெரிய தொன்றெனத் தெற்றென விளங்கும். "கண்ணபுரத்து அடியன் கலியன்" என்று தம்மைக் கூறிக்கொள்வதில் இவர்க்குள்ள திருவீறுடைமை ஆழங் காணவல்ல தொன்றன்று.

## வழிபாட்டின் பயனாக நம்மாழ்வார் வகுப்பன

ஓ உலகீர்! திருக்கண்ணபுரத்தில் ஆலிலையில் கண்வளர்ந்தருளும் அமலனைக் கிட்டி, அவனுடைய திருவடிகளிரண்டிலும் காலை மாலை கமல மலரிட்டு உங்கள் வினைகெட வழிபட்டு வாழுங்கள். அத்தலத்தை நாளும் நினைந்து தொழுது கிளர்த்தியோடு வர்த்தியுங்கள். அங்கே மகிழ்ந்துறையும் பரமபத நிலயனை அமரர் பெருமானை, உங்களது துயர்கெட வாடா மலரிட்டு வணங்குமின் தொண்டீர்! அவ்வாறு செய்ய அங்கு விரும்பியுறையும் சர்வேச்வரன் உமக்கு ரக்ஷகனாக ஆவான். அவன் தன் திருவடிகளைக் குறித்துப் பிரபத்தி பண்ணின சர்வாதிகாரிகளுக்கும் உபாய பூதனாவான். இறுதியில் ஈறிலின்பத்தை யருளும் மஹோபகாரகன். திருக்கண்ணபுரத்திலே உலக ரக்ஷிக்கைக்காக வந்து நின்றவன். தன் திருவடிகளில் அன்புடையார்க்கு

அன்பே ஒருவடிவு கொண்டாற்போலே யாவான். அங்கு விரும்பி உறைபவன், தன் பக்கல் பக்தியுடையார்க்குத் தானும் அவர்கள் பால் மெய்யன்புட னிருப்பான். வேறு பயனை விரும்பி வழி படுவோர்க்கும் அப்பயனளவு எல்லாம் கொடுத்துத் தன்னை மறைத்துக் கொள்வான். தங்க ளுள்ளத்திலே தன்னை ப்ராப்ய மாக ஸ்வீகரிப்பார்க்குச் சாதாரண பந்துவாயிருக்கச் செய்தே அசாதாரண சுலபனுமாவன். அத்தால் அவர்கள்பால் பிணியும் சாராது. பிறவியையும் நாசம்செய்து அருளுவன். அவ்வூரிலே பரம பதத்தில் இருப்பது போன்று, அணித்தாயுள்ள (சந்நிஹிதனை) வன் திருவடிகளை நிரந்தரமாக வணங்கி அனுபவிக்கப் பாருங் கள். அப்படி அனுபவிக்க முன்புண்டான துக்கங்களெல்லாம் அழிந்தொழிவதோடு மேலொரு துக்கமும் வராது. இனி எனக்கு என்ன குறை? அவ்வாறே அங்குறையும் ஆதியானை அடைந் தார்க்கு அல்லலில்லை. மேலும் அத் திருக்கண்ணபுரத்தின் பெயர் சொன்னமாத்திரத்தில் ஒருபோதும் உங்களைத் துயர்பாடு சாரா.

"மாலை நண்ணி" என்ற திருவாய் மொழியுள், ஆழ்வார் இவ்வாறு, ஒவ்வொரு பாசுரத்தும் பெருமாளை வழிபடுவார் அடையும் பயன்களைச் சொல்லியிருத்தல் மிகவும் வியத்தற் குரியது; வணங்கிப் பயனடைதற்குரியது.

இனி, பெரியாழ்வார், "கணபுரத்தமுதே" என்று கூறும் பாசுரப் பொருளும், ஸ்ரீ ஆண்டாள் "கண்ணபுர நகர் வாட்ட மின்றி மகிழ்ந்துறை வாமனன்" என்று பாடியருளும் பாசுரக், குறிப்பும் கருத்தும், ஸ்ரீ குலசேகரப் பெருமாள் "கண்டவர்தம் மனம் வழங்கும் கணபுரத்தென் கருமணியே எண்டிசையும் புக ழுடையாய் இராகவனே தாலேலோ" என்று பரிந்து பாடித் தாலாட்டும் தகுதியும் உணர்ந்து ஒழுகி உய்திபெறற்குரியன.

## உற்சவங்கள்

மாசிமக உற்சவம் மிகச் சிறப்பானது. சரித்திர சம்பந்த முடையது. கருடபர்வதத்திற்குக் கருடாரூடராய்க் காட்சி யளித்தது. இது பத்துநாள் உற்சவம். ஒன்பதாம் திருநாள் பௌர் ணமியன்று இத்தலத்தின் கிழக்கே 10 மைல் தூரமுள்ள திரு மலைராயன் பட்டினத்திற்கு எழுந்தருளி, அங்குள்ள வெள்ளை மண்டபத்திலிருந்து 3 மைல் தூரமுள்ள கடற்கரைக்குப் பவழக்



கால் சப்பரத்தில் கருடாரூடராய் எழுந்தருளித் தீர்த்தம் சாதித் தருளும் வைபவம் வாசாமகோசரமாம். இங்கு நெய்தல் நில மக்களின் தூய பேரன்பும் கட்டுக்கடங்கா மகிழ்ச்சியும் அனைவரை யும் அதிசயிக்கவைப்பதொன்றாகும்.

## வைகாசி பிரம்மோற்சவம்

இதுவும் புராண சம்பந்தமுடையதே. உபரிசரவசு மன்ன னால் நடாத்தப்பெற்றது. 8ஆம் திருநாளில் ஸ்ரீ பத்மினிதேவியார் திருக்கல்யாண மகோற்சவம் நடைபெறும். பெருமாளின் திரு நட்சத்திரம் சித்திரையில் அஸ்தமாயினும், வசுமன்னரான போன்பர் தனதருமைத் திருமகளாரைத் திருமணம் செய்து கொடுத்தத் திருநாளையே பிரம்மோற்சவமாகக் கண்டருளு கின்றார். இதனால் அடியவர்க் கெளியவனாகிய இறைவனின் பேரருள் மாட்சிப் பெரிதும் விளங்கும். இவையன்றித் திருப் பவித்திர உற்சவம், திருவத்யயன உற்சவம், பஞ்சபர்வ உற் சவங்கள் முதலியனவும், தமிழ் வருடப்பிறப்பு, யுகாதி, அக்ஷய திருதியை, சித்திரா பௌர்ணமி, பதினெட்டாம் பெருக்கு, ஸ்ரீ ஜயந்தி, விஜய தசமி, திருக்கார்த்திகை, பாரிவேட்டை, மட்டையடி முதலிய அழகிய உற்சவங்களும் கண்களுக்குப் பெரும் களிப்பூட்டும் பெற்றியன. திருப்பவித்திரோற்சவ கடைசி நாள் காலையில் நடைபெறும் உதயகருட சேவை மிகஉயர்ந்த சேவை யாகும். இவ்வுற்சவ காலங்களில் பெருமாள் தங்க வாகனங்களின் மீது எழுந்தருளிக் கருணை வெள்ளம் வழங்குவர். மாசி மகோற் சவ விடாயாற்றியில் கண்டருளும் தெப்போற்சவம் மிக மிக அழகியதாகும். இவ்விழாவைக் காணப் பல்லாயிர மக்கள் கூடுவர். ஸ்ரீகண்ணபுரத் தாயார் வெள்ளிக்கிழமை தோறும் பிரகாரத்தில் புறப்பாடு கண்டருளுவர். மார்கழிமாத திரு அத்யயனோற்சவம் முடிந்தபின், 9 நாட்கள் நாச்சியார் திருஅத்யயன உற்சவம் கண் டருளுகின்றார். இதில் கடைசி உற்சவம் தை அமாவாசையில் நடைபெறும். அன்று பெருமாள் தாயார் திருக்கோலமும், தாயார் பெருமாள் திருக்கோலமும் தாங்கி புறப்பாடு கண்டருளி சேர்த் தியில் அடியார்க்குக் கருணை மாரி பொழிதல் ஒப்பனையற்ற உயர்பெருங் காட்சி. தை மாதத்தில் கனு உற்சவமும், பங்குனி

உத்திரத்தில் தாயார் தமது சந்நிதியில் பெருமாளுடன் கண்டருளும் சேர்த்தி உற்சவமும் விசேடமுடையன.

## திருவாராதன கால முதலியன

நாடோறும் ஆறு காலம் திருவாராதனம் நடைபெறுகின்றது. தாயார் பெருமாள் சந்நிதிகளில் நாடோறும் அஷ்டோத்தர சதக நாமாவளி அர்ச்சனைகள் நடைபெறுகின்றன. ஸ்ரீசௌரி ராஜப் பெருமாள் பக்கத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீகண்ணபுர முடையானுக்குத் தினமும், தாயாருக்கு வெள்ளிக்கிழமை தோறும் கோயில் திட்டத்தில் திருமஞ்சனம் நடைபெறும். பெரிய பெருமாளுக்கு வருடத்தில் 15 முறைகளுக்குக் குறையாது திருமஞ்சனம் நடைபெறுகின்றது.

## திருவாபரணங்கள்

தங்கக் கவசம், தங்கக் கிரீடம், வெள்ளியங்கி முதலிய விலையுயர்ந்தவைகளும் மற்றும் பல திருவாபரணங்களு முள்ளன. உயர்ந்த திருப்பரிவட்டங்கள், வெள்ளிப் பாத்திரங்கள், விளக்குகள் முதலியன மிக்கனவாயுள்ளன. தங்கக்கவசம் : ஸ்ரீ உ. வே. வித்வான் திருவேங்கடாசாரிய ஸ்வாமிகளால் சமர்ப்பிக்கப் பெற்றது. இவர்கள் பட்டப்பா சுவாமியென பிரசித்தி பெற்ற மஹானவர். இக்கவசத்தை ஸ்ரீ சௌரிப் பெருமாள் எப்போதும் திருமேனியில் சாத்திக் கொண்டிருக்கின்றனர். தங்கக் கிரீடம் : தற்போது திருமலையில் பெரிய ஜீயராக எழுந்தருளியுள்ள ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவிராஜக கேள்வியப்பன் சுவாமிகளால் சமர்ப்பிக்கப் பெற்றது. மூலவர் பன்முறை இதனை சாத்திக் கொள்வதுண்டு.

## வாகனங்கள்

மிகச் சிறப்பான தங்க வாகனங்களும், மரத்தினாலாய வாகனங்களு முள்ளன. ஸ்ரீகருடன், குதிரை, சூரியப் பிரபை, சந்திரப் பிரபை, பல்லக்கு ஆகிய இவை தங்கத்தினாலாகியவை; மற்ற இந்திர விமானம், புன்னைமரம், யானை, பவழக்கால் சப்பரம், சேஷவாகனம் முதலியன மரத்தினாலாகியவை.



இவற்றுள் கருடவாகனம் 35 வருடங்களுக்கு முன்பிருந்த ஜீயர் சுவாமி யொருவராலும், குதிரை வாகனம், ஸ்ரீ உ. வே. புளியக்குடி ஸ்ரீரங்காசாரிய ஸ்வாமிகள், பொருட்சகாயத்தால் கோயிலதிகாரிகளாலும், தங்கப்பல்லக்கு ஸ்ரீயதீந்திரப் பிரவண செட்டியார் சாரிட்டியாராலும், சூரியப் பிரபை சந்திரப் பிரபை புன்னைமரம் இரண்டும் : ஸ்ரீ உ. வே. வித்வான் திருவேங்கடாசாரிய ஸ்வாமிகளாலும் செய்து சமர்ப்பிக்கப் பெற்றவையாகும்.

தெப்பம் : செங்கமல நாயகிபுரம் கைங்கரிய ஸ்ரீமானான, ஸ்ரீமான் அரங்கசாமி நாயடுகாரவர்களால் பதினாயிர ரூபாய் செலவில் அழகிய திருக்கோயில் போன்று செய்து சமர்ப்பிக்கப் பெற்றுள்ளது.

## நிர்வாகம்

இத்தேவஸ்தானம் சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தாரின் பார்வைக்கு உட்பட்டது. 1946ஆம் ஆண்டில் இந்தத் தேவஸ்தானத்தின் நிர்வாகம் சீர்பெற நடைபெற வேண்டி ஒரு ஸ்கீம் (திட்டம்) போர்டாரால் வகுக்கப்பெற்றது. அத்திட்டத்தின்படி தற்போது ஏனங்குடி உயர்திரு. கோ. கோவிந்தசாமி நாயுடு அவர்கள் நிர்வாக தர்மகர்த்தராகவும், முடிகொண்டான் திரு. சுந்தரேச அய்யர் அவர்களும் விசலூர் முத்துவேலு பிள்ளை அவர்களும் தர்மகர்த்தராகவும், ஸ்ரீ. S. தங்கவேலு பிள்ளை அவர்கள் மானேஜராகவும் போர்டாரால் நியமிக்கப்பெற்று இத்தேவஸ்தான நிர்வாகத்தைச் செவ்வனே நடத்தி வருகின்றார்கள்.

## வருமானம்

கோயிலுக்குச் சொந்தமாக நஞ்சையும் புஞ்சையுமாக 447 ஏக்கர் 3 செண்டு நிலமுள்ளது. வருட வருமானம் சுமார் 24,000 ரூபாய்களாகும்.

## செலவு விபரம்

பின்னால் விவரமாகக் குறிக்கப்பட்டு இருக்கின்றது. அன்பர்கள் அதை நோக்கவும்.

1-7-50 முதல் 30-6-51 வரை தேவஸ்தானத்தின் வரவு செலவு

1360-ம் பசலி வரவு ரூ. 24,118—14—9

,, ,, செலவு ரூ. 24,961—11—9

## திருப்பணி

திருக்கோயில் கருங்கல் திருப்பணி. சுற்று மதிலும் கருங்கல் திருப்பணியே. கோபுரங்கள் மிகப்பழைமையன. அதனையும் புதுக்கிவிடின் புதுக் கோயிலாகிவிடும். பல மெய்யன்பர்களின் பெரும் பொருளுதவிகொண்டு கோயிலதிகாரிகள் சந்நிதியை ஜீரணோத்தாரணம் செய்து நிகழ்ந்த சுபானு வருடம் ஆனிமாதம் 25-ஆம் நாள் மஹாசம்ப்ரோக்ஷணம் செய்து வைத்துள்ளனர்.

## அறிமுகம்

இந்நூலின் முகப்பிலும் இறுதியிலும் அச்சிடப்பட்டுள்ள படங்களின் போட்டோ காப்பிகளைத் தேவஸ்தானத்திற்கு அன்பளிப்பாக அளித்த சூரனூர் குறுநிலக்கிழார் கிருட்டினசாமி அய்யங்காருக்கு நன்றி உரிதாகுக.

## முடிப்புரை

இத்தலம் மிகப் பழைமையானது. சுயம்புத் தலம். மந்திர சித்தி க்ஷேத்திரம். ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்றது. முனிவர் பலரால் வழிபடப்பெற்றது. புராணப்பிரசித்தி யுடையது. அரசர் பலரால் ஆராதிக்கப்பெற்றது. இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளை வணங்கத் தீவினையகலும், வறுமை மடியும், வாழ்வு பெருகும். எனவே அவனை வணங்கி நம்மாழ்வார் கூறிய நலங்களை நாமும் பெறுவோம்; நானிலமும் பெறுக.

மைவண்ண நறுங்குழலும் மகரம்சேர் குழைகாதும்
வண்டமரும் வனமாலை மணநாறும் மணிமுடியும்
திருப்பவள முறுவலொடு திகழ்திருநீள் கொடிமூக்கும்
மதிபழித்த திருநுதலும் மலர்ந்தகன்ற மலர்க்கண்ணும்
பொருவரைமுன் போர்தொலைத்த பொன்னாழி வலப்புயமும்
போதமார் திருச்சங்கம் பொலிமற்றோர் திருத்தோளும்
இடையாருந் திருக்கையோ டேற்றருளும் மலர்க்கையும்
நலங்கிளருந் திருமகள்சேர் அகலங்கொள் நன்மார்பும்
நனியிலகு செம்பொன்னார் நவிலரிய செந்துகிலும்



தண்டா மரைசுமக்கும் தண்ணளிசேர் தாளிணையும்
கொண்டருளி நின்றருளும் கோலமார் கணபுரத்து
எண்டிசையும் புகழ்பரவும் எழில்சௌரி ராஜன்றன்
கண்டவர்தம் மனங்கவரும் கவினுறுநல் அருளுருவை
கண்ணாரக் கண்டென்றுங் களித்துமிக மகிழ்வெய்தி
“நாதாய சௌரயே நம”வென்று நனிவாழ்த்தி
மெய்யாரத் தொழுதுவக்கும் வாழ்வு
வையமது பெற்று மகிழ்ந்தினிது வாழியவே.

பேறு தரினும் பிறப்பிறப்பு நோய்மூப்பு
வேறு தரினும் விடேன் கண்டாய்—ஏறுநீர்
வண்ண புரத்தாயென் மனம்புகுந்தாய் வைகுந்தா
கண்ண புரத்தா யுன்கழல்.

பாதம் நாளும் பணியத் தணியும்பிணி
ஏதம் சாரா எனக்கே லினியென்குறை
வேதநாவர் விரும்பும் திருக்கண்ண புரத்து
ஆதியானை அடைந்தார்க்கு அல்ல லில்லையே.

111791

ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் திருவடிகளே சரணம்.

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை, சென்னை-14